பண்ணுருட்டி நகராட்சி ஆணையரின் செயல்முறைகள்

முன்னிலை:- திருமதி.மி.ச.ப்ரீத்தி எம்.ஏ.,

ந.க.எண்.1829/2023/எப்1

நாள். 11 .03.2024

பொருள் : மனைப்பிரிவு – பண்ணுருட்டி நகராட்சி – திருவதிகை கிராமம், வார்டு C. பிளாக் 3, நகரளவு எண்.11/2, பழைய எண்.18/2ல் 0.52 ஏக்கர் (அ) 2100 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் இணைய வழி கடிதம் ந.க.எண்.ROC No.40QQHCXS/13042 /2023/2023/TCP, நாள்.17.8.23.
2. நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட தானப்பத்திரம் ஆவண எண்.2618, நாள்.19.07.2018.
3. சார்பதிவாளர், பண்ணுருட்டி அவர்களின் கடித ந.க.எண்...34/2024, நாள் 01.02.2024.
4. நகராட்சி பொறியாளர், பண்ணுருட்டி அவர்களின் குறிப்பு நாள்: 21.09.2023 (ம) 31.01.2024.
5. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு நாள்.27.09.2023 மற்றும் 22.02.2024.
6. திரு.ம. வடிவேல் கீழ் அழிஞ்சிப்பட்டு என்பவரின் விண்ணப்ப நாள்.07.03.2024.
7. இந்நகர் மன்ற தீர்மான எண்.544 , நாள்.21.02.2024.

உத்திரவு:-

பார்வை 1-ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் கடிதத்தில் பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட திருவதிகை கிராமம் வார்டு C. பிளாக் 3, நகரளவு எண். 11/2, பழைய எண்.18/2ல் 0.52 ஏக்கர் (அ) 2100 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ம.வ/ந.ஊ.உ.இ(க.மா) எண்.86/23 என எண்ணிடப்பட்டு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் மனுதாரரின் கடிதத்தில் மனைபிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட தானப்பத்திரம் எண். 2618, நாள் 19.07.2018-ல் ஒப்படைக்கப்பட்டு அசல் தானப்பத்திரம் பெறப்பட்டுள்ளது. சிறப்பு நிபந்தனை எண்.3-ல் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை நகராட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உரிமை மாற்றம் செய்து சர்வே எண்ணில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

சிறப்பு நிபந்தனைகள் 4-ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலபயன்மாற்ற கட்டணமாக அரசுக்கு செலுத்த பார்வை 3-ல் காணும் சார்பதிவாளர், பண்ணுருட்டி அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சந்தை மதிப்பின்படியும் மற்றும் பார்வை 4-ல் காணும் நகராட்சி பொறியாளர் அவர்களின் மதிப்பீட்டின்படி மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளுக்கான குடிநீர் குழாய் அமைக்கும் பணி, மழைநீர் வடிகால் வசதி மற்றும் தெரு விளக்கு வசதிக்கான கட்டணங்கள் பார்வை 5-ல் காணும் இவ்வலுவலக அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மனைப்பிரிவுதாரரால் கீழ்கண்டவாறு கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

வ. எண்	விவரம்	தொகை	கட்டணம் செலுத்திய விவரம்
1.	வளர்ச்சி கட்டணம் (குடிநீர் வசதி, மழைநீர் வடிகால் வசதி மற்றும் தெருவிளக்கு, சிறுபாலம்)	ரூ.9,96,000/-	செ.சீ.எண்.095/001/1/23-24/ 0016741 நாள்.01.02.2024
	நிலபயன்மாற்றக் கட்டணம்	ரூ.6300/-	Ch.No.0021319 நாள். 07.03.2024
2.	மனைப்பிரிவு அனுமதி கட்டணம்	ரூ.10000/-	
3.	கூராய்வு கட்டணம் 1. TNCD & BR விதிகள் 2019 Part II பிரிவு 7(2) (II) -ன்படி 1 ச.மீ ரூ.1.50.	ரூ.3200/- ரூ,8000/-	
	2. மனைக்கு ரூ.1000/- வீதம் 8 மனைகளுக்கு	ரூ.8000/-	
4.	5 ஆண்டுகளுக்கு பின் திரும்ப பெறக்கூடிய வைப்பு தொகை (1 ஏக்கருக்கு 1.00 இலட்சம் வீதம்)	ரூ.52,000/-	095/001/1/23-24/0021320 நாள். 07.03.2024
	மொத்தம் ரூ.	ரூ.10,83,500/-	

மேற்படி நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், கடலூர் அவர்களின் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்திற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் அளித்திடவும் மற்றும் மேற்படி மனை பிரிவுவரைபடத்தில் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ள சாலைகள் 882.03 ச.மீ மற்றும் பொது ஒதுக்கீடு 50 ச.மீ நிலங்களை ஏற்கவும் பார்வை 7-ல் காணும் இந்நகர்மன்ற தீர்மான எண்.544 நாள்.21.02.2024-ல் மன்றம் அனுமதி அளித்துள்ளது.

பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட திருவதிகை கிராமம் வார்டு C. பிளாக் 3, நகரளவு எண்.11/2, பழைய எண். 18/2-ல் 0.52 ஏக்கர் (அ) 2100 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் இணைப்பில் உள்ள குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ம.வ/ந.ஊ.உ.இ(க.மா)எண்.86/23 (இணையதள ஒப்புதல்) பார்வை 1-ல் காணும் கடிதத்தில் விதித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

11/3/24

ஆணையாளர்,
பண்ணுருட்டி நகராட்சி.

11.3.24

இணைப்பு: மனைப்பிரிவு வரைபடம்-1.

பெறுநர்:

திரு.ம. வடிவேல் S/O. மணி,
10, பள்ளிக்கூடத் தெரு, கீழ் அழிஞ்சிப்பட்டு,
கடலூர்- (TK)

நகல்:

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர்.
2. சார்பதிவாளர் இணை -II, சார்பதிவாளர் அலுவலகம், பண்ணுருட்டி.
3. உதவி பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், பண்ணுருட்டி.